Published on April-10-2022 Dinamalar paper

# சி.சி.டிவி., கேமரா அமைக்க ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கல்



கடலூர் மாவட்டத்தில் சி.சி.டி.வி., கேமரா அமைக்க ரூ. 2 லட்சத்திற்கான காசோலையை எஸ்.பி., சக்தி கணேசனிடம் கிரிம்சன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ரமேஷ் பிரபாகரன் வழங்கினார். அருகில் பங்குதாரர் ஜேக்கப் ராஜா.

**கடலூர், ஏப். 10–**

கடலூரில் சி.சி.டிவி., கேமரா அமைக்க, கடலூர் சிப்காட் கிரிம்சன் நிறுவனம் சார்பில் காவல் துறையிடம், ரூ. 2 லட்சம் நிதியுதவி வழங்கப் பட்டது.

கடலூர் காவல் துறை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், அதற்கான காசோலையை, எஸ்.பி., சக்திகணேசனிடம், கிரிம்சன் நிறுவன நிர்வாக இயக்கனர் ரமேஷ் பிரபாகரன் வழங்கினார்.

நிறுவன இயக்குனர் பரணீதரன், பங்குதாரர் ஜாகோப் ராஜா ரமேஷ் பிரபாகரன், மனித வள மேம்பாட்டுத்துறை துணை மேலாளர் பெனிசன் மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரி பங்கேற்றனர்.